**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 25.10.2025

**அசல் வழக்கு எண்.396/2019**

**பி.சா.2 – ரேவதி, க/பெ.லட்சுமிபதி**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

தற்பொழுது நீங்கள் எங்கு வசிக்கிறீர்கள் என்றால் என்னுடைய அம்மா வீட்டில் வசிக்கிறேன். 26 ஏ மதனம்பாளையம் தெரு, காஞ்சிபுரத்தில் வசிக்கிறேன். தாவா சொத்து அதாவது மதனம்பாளையம் தெரு, பிள்ளையார் பாளையத்தில் இருக்கிறது என்றால் சரிதான். சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து உங்கள் தகப்பனார் சம்பாதித்தது கிடையாது என்றால் சரிதான். உங்கள் பாட்டி தெய்வானை அம்மாள் செட்டில்மெண்ட் அல்லது உயில் ஏதேனும் எழுதினார்களா என்றால் இல்லை. சர்வே நம்பர் 1694 சம்பந்தமாக மதனம்பாளையத்தில் உள்ள சொத்து சம்பந்தமாக உங்கள் பாட்டியோ தாத்தாவோ தாயாரோ தந்தையாரோ செட்டில்மெண்ட் உயில் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். உங்க தாத்தா சண்முக முதலியார் என்பவருக்கு பெருமாள் வெங்கடேசன் முத்துக்குமார் ஆகியோர் வாரிசு என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். முத்துக்குமார் திருமணம் செய்து கொள்ளாமல் இளம் வயதில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அப்பொழுது முத்துக்குமார் அவர்களின் தாயார் தெய்வானை அம்மாள் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். கடந்த 03.07.1984ம் ஆண்டு உங்கள் அப்பா வெங்கடேசன் என்பவரும் பெரியப்பா பெருமாள் என்பவரும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் அவர்களுடைய தாயார் தெய்வானை அம்மாளை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் உங்களுடைய அத்தைகள் ஞான சௌந்தரி பெரிய அத்தை வள்ளியம்மாள் ஆகியோரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். உங்கள் அப்பா கடந்த 14.08.1994 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். உங்கள் அப்பா இறந்த பொழுது உங்கள் பாட்டி தெய்வானை அம்மாள் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த வாரிசு சான்றிதழில் தெய்வானை அம்மாள் பெயர் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வாரிசு சான்றிதழ் யார்

வாங்கியது என்றால் தெரியாது. அந்த சான்று வழக்கில் பிரதிவாதி தரப்பில் நான்காவது ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் தெய்வனை அம்மாளை தரப்பினராக சேர்க்காமல் பொய்யாக வாரிசு சான்றிதழ் வாங்கிய தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. உங்கள் பாட்டி தெய்வானைக்கு சொத்தில் பாகம் உண்டு என்றால் சரி இல்லை. தாவா சொத்தில் வாதிக்கும் அவரது சகோதரிகளுக்கும் பாகம் உண்டு என்றால் சரியில்லை. நீங்கள் எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் தேதி தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 13 6 2018 அன்று நீங்களும் உங்கள் தாயார் உங்கள் சகோதரிகளும் சேர்ந்து பாகப்பிரிவினை எழுதிக் கொண்டீர்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை செல்லத்தக்கது அல்ல என்றால் சரியில்லை. உங்களுக்கு உரிமை இல்லாத சொத்தையும் நீங்கள் சேர்த்து எழுதிக் கொண்டீர்கள் என்றால் சரியில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு உங்களுக்கு வரவில்லை என்று கூறுகிறீர்கள் உங்களிடம் காட்டப்படுகின்ற அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் உங்களுடையது என்றால் சரியில்லை. நீங்கள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு வாழ்வதற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. அதேபோல் உங்களது சகோதரி பாரதி மற்றும் ஈஸ்வரி ஆகியோர் அறிவிப்பை பெற்றுக் கொண்டார்களா என்றால் தெரியாது. உங்களுக்கு புழக்கடை வரை பாகம் இல்லை ஆனால் நீங்கள் எழுதிய பாகப்பிரிவினையில் புழக்கடை வரை பாகம் இருக்கிறது என்று பொய்யாக எழுதிக் கொண்டீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் வாதிக்கு கொடுக்க வேண்டிய பாகத்தை கொடுக்காமல் ஏமாற்றி வருகிறீர்கள் அவருக்கு முறைப்படி சேர வேண்டிய பாகம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.